# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

# 1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(1992, டிசெம்பர் மாதம் 08 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

1992, டிசெம்பர் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60

தபாற் செலவு : ரூபா 1.00

1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1992, டிசெம்பர் மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 13/90

**இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.**

“இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று, அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறும் வகையில் நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகம் எக் குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் காரியங்களையும் இதற்கு முன்பு வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவிருக்கின்றவர்களான அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகம்” என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறு வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் திருத்தவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். இலங்கை எந்திரவியல் டிப்புளோமாதாரிகள் நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபன உறுப்பாண்மைக்கு பின்வருவோர் தகவுடையோராதல் வேண்டும் :— உறுப்பாண்மைக்கான தகவுடைமை.

(அ) கனிட்ட தொழினுட்ப அலுவலர்கள் (க. தொ. அ.) சான்றிதழை வைத்திருக்கும் எவரேனும் ஆள் ;

(ஆ) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திலிருந்தான அல்லது வேறே தேனும் தொழினுட்பக் கல்லூரியிடமிருந்தான தொழினுட்ப வியலிலான தேசிய டிப்புளோமாவை (தே. தொ. டி.) வைத் திருக்கும் எவரேனும் ஆள் ;

(இ) கூட்டுத்தாபனத்தினால் காலத்துக்குக் காலம் ஏற்றுக்கொள்ளப் ளப்படக்கூடிய வேறேதேனும் அங்கீகரிக்கப்பட்ட தகுதியுடைய வேறெவரேனுமாள்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.**

4. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன :—

(அ) விரிவுரைகள், கருத்தரங்குகள், விவாதங்கள், தொழினுட்ப நூல்கள் மூலம் அல்லது வேறுவகையாக எந்திரவியல் தொழினுட்பம் தொடர்பான அல்லது அதனைப் பாதிக்கும் பாடங்களில் தகவல்களை பரப்புதல்;

(ஆ) உயர்கல்வி கற்றலை ஊக்குவித்தலும், அந்நோக்கத்திற்காக, பரிசு அல்லது பரிசுகளை அல்லது வேறு கொடைகளை அல்லது விசேட சித்தியை ஏற்படுத்தி அத்தகைய நியதிக்கும், காலத்திற்குக் காலம் விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான நிபந்தனைகள் மீது நன்கொடைகளை ஊக்குவித்தலும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கு ஆட்களின் பொருத்தமுடைமையை நிச்சயப்படுத்துவதற்காக, எந்திரவியல் தொழினுட்பத்தில் அறிமுறையிலும் பயிற்சியிலும் பரீட்சைகளை நடாத்துதல்;

(ஈ) கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மீதும் பிணைப்பொறுப்புக்கள் மேலும், அதன் நோக்கங்களுக்கு தேவைப்படும் எவையேனும் பணங்களை கடன் எடுத்தல்;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப் படாத பணத்தை, தகுதியானதென அதனால் கருதப்படும் அத்தகைய முதலீடுகளிலும், பிணைப்பொறுப்புக்களிலும் அல்லது ஆதனங்களிலும் முதலீடு செய்தல்;

(ஊ) கொள்வனவு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறுவகையாக, ஒரு நூல் நிலையத்தை நிறுவி வரைபடங்கள், மாதிரி உருக்கள், சித்திரங்கள், வேறு சாதனங்கள் அடங்கிய தொகுதியொன்றினையும் அமைத்தலும் அல்லது அவற்றை கொள்ளுதலும், பேணி வருதலும், விசாலித்தலும், மேம்படுத்தலும்;

(எ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள இதையொத்த நிறுவகங்களுடனும் கழகங்களுடனுமான ஒத்துழைப்பை வளர்த்தலும்;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய ஏனைய நடவடிக்கைகளை எடுத்தல்.

5. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்யவும் நிறைவேற்றியும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பில்லாமல் பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், அரசிடமிருந்து அல்லது வேறு எவையேனும் குழுக்களிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்புக்களிடமிருந்து மானியக்கொடைகளையும் வேறு உதவிகளையும் நாடுவதற்கும் பெறுவதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பனவும் அடங்கும். கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

6. (1) சிறப்புக் கூட்டமொன்றிலும், அத்துடன் அதில் சமூகமளித்து, வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குகள் மூலமும், உறுப்பினர்களை அனுமதித்தல், மீளப்பெறல் அல்லது அவர்களைக் கலைத்தல் என்பவற்றிற்கும்; அத்துடன் உறுப்பினர்களையும், கூட்டங்களில் வாக்களிப்பதற்கான அவர்களது உரித்துடைமையை வகுப்பாக்கம் செய்வதற்காகவும், முகாமைப் பேரவையினதும்; அத்துடன் கூட்டுத்தாபனத்தின் வெவ்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் கடமைகளை அகற்றுவதற்காகவும், அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் பற்றியும், அத்துடன் வேறுவகையாக, கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல், கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபின், அதை ஆக்கப்பட்ட அதேபோன்ற ஒரு கூட்டத்தில் அதே முறையில் மாற்றப்படலாம், சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம். கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

முகாமைப் பேரவை.

7. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவாக, இதனகத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக முகாமைப் பேரவை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதிகளினால் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய, எந்திரவியல் தொழிநுட்பத்தின் பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக முகாமைப் பேரவையின் பொது உறுப்பாண்மையானது, தலைவர், கடந்தகாலத் தலைவர்கள் இருவர், மூது துணைத்தலைவர் ஒருவர், துணைத்தலைவர்கள் இருவர் செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், பத்திரிகையாசிரியர், கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள் இருபத்தெட்டுப்பேர், என்போரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைப் பேரவை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவி வகிக்கும் நிறுவனத்தின் பேரவையாதல் வேண்டும்.

ஆதனத்தை வைத்திருப்பதற்கு கூட்டுத்தாபனத்துக்குள்ள தத்துவம்.

8. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைய, கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றைச் செய்வதற்குச் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் :—

(அ) எத்தகையதும் எத்தன்மையினதும் எவ்வகையினதுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வனவு, கொடுத்துமாற்றல், கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு அல்லது மரணசாதன அன்பளிப்பு மூலம் அல்லது வேறெம்முறையிலும் கொள்ளுதலும், இடையீடின்றி அல்லது வேறேதேனும் வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்கு அமைய அல்லது வேறுவகையாக ஏதேனும் குறைந்த காலத்துக்கு வைத்திருத்தலும் துய்த்தலும்;

(ஆ) அதன் ஆதனங்களுள் எதனையும் விற்றலும், மானியக் கொடையாக அளித்தலும், மரணசாதன மூலம் கையளித்தலும், சாட்டுதல் செய்தலும் அல்லது வேறு வகையாகக் கையாளுதலும்.

கட்டணங்களையும் ஒப்பப் பணங்களையும் இறுப்பதற்கான தத்துவம்.

9. கூட்டுத்தாபனமானது பின்வருவனவற்றை இறுப்பதற்குச் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்படும் ஏதேனும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்குக் கூட்டுத்தாபனம் நியாயமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டணங்கள்;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவ்வகுப்பினதுமான உறுப்பாண்மைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கான கட்டணங்கள், அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் சேவைகள் தொடர்பில் நியாயமானதெனக் கூட்டுத்தாபனம் கருதக்கூடியவாறாக கூட்டுத்தாபன உறுப்பினர்களிடமிருந்தான அத்தகைய ஒப்பப்பணங்களும் கட்டணங்களும்.

**நிறுவகத்திடமிருந்து வருமதியானவையும் அதற்குச் செல்மதியானவையுமான கடன்கள்.**

10. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் நிறுவகத்திற்கு உள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புகளும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று நிறுவகத்திற்குச் செல்லுமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படற்பாலனவையான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் கட்டணங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்வாறு பொறிக்கப்படவேண்டும் என்பது.**

11. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் கௌரவச் செயலாளரின் கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டுமென்பதுடன், முகாமைப் பேரவையின் தீர்மானமொன்றின் அதிகாரத்துடனும், முகாமைப் பேரவையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களான பதவி தாங்குநர்கள் இருவர் முன்னிலையிலும் தவிர எந்தச் சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமூகமளித்தமைக்கு அடையாளமாகச் சாதனத்தில் தங்கள் பெயரை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பம் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்று தனிவேறானதாதலும் வேண்டும்.

**உறுப்பினர்களின் பொறுப்பு வரையறை செய்யப்படுதல்.**

12. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காக, அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து போமதியாக இருக்கவேண்டிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத்தொகையை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

**குடியரசினதும் மறுபேர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.**

13. இச்சட்டத்தில் உள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின் கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

14. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்